## யூன் – 10 - சனி

### "நீங்கள் வெள்ளையடித்த கல்லறைக்கு ஒப்பானவர்கள்"

**முதல் வாசகம்: தோபித்து 12 – 1,5 – 15, 20**

அக்காலத்தில், திருமண விழா முடிந்ததும், தோபித்து தம் மகன் தோபியாவை அழைத்து, "மகனே, உன்னுடன் பயணம் செய்த இளைஞருக்கு இப்பொழுது சம்பளம் கொடுத்துவிடு உரிய தொகையைவிட மிகுதியாகவே கொடு" என்றார். அதற்கு அவர், "அப்பா, அவருக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்கட்டும்? நாங்கள் கொண்டு வந்த தொகையில் பாதியை அவருக்குக் கொடுத்தாலும் தகும். ஏனெனில் அவர் என்னை நலமே திரும்ப அழைத்து வந்து சேர்த்தார் என் மனைவியை நலம் பெறச் செய்தார் பணத்தை என்னுடன் கொண்டுவந்தார் உங்களுக்கு நலம் அளித்தார். இவற்றுக்கெல்லாம் சேர்த்து எவ்வளவு கொடுக்கலாம்?" என்று கேட்டார். தோபித்து அவரிடம், "மகனே அவர் கொண்டுவந்த அனைத்திலும் பாதியைப் பெறுவதற்கு அவருக்குத் தகுதி உள்ளது" என்றார். பின்னர் இரபேலை அழைத்து, "நீர் கொண்டுவந்த அனைத்திலும் பாதியைச் சம்பளமாக எடுத்துக் கொண்டு நலமே சென்று வருக" என்று கூறினார். நான் இரபேல். ஆண்டவருடைய மாட்சிமிகு திருமுன் பணிபுரியும் ஏழு வானதூதர்களுள் ஒருவர்" என்றார். அதிர்ச்சி மேலிட இருவரும் அச்சத்துடன் குப்புற விழுந்தனர். இரபேல், அவர்களிடம், "அஞ்சாதீர்கள். உங்களுக்கு அமைதி பெருகட்டும். கடவுளை என்றென்றும் புகழுங்கள். என் விருப்பப்படியன்று, கடவுளின் திருவுளப்படியே நான் உங்களோடு இருந்தேன். உங்கள் வாழ்நாள் முழுவதும் கடவுளைப் புகழ்ந்து பாடுங்கள். நான் ஒன்றும் உண்ணவில்லை. நீங்கள் கண்டதெல்லாம் வெறும் காட்சியே என அறிந்துகொள்ளுங்கள். இப்பொழுது உலகில் இருக்கும்பொழுதே ஆண்டவரைப் போற்றுங்கள் கடவுளது புகழை அறிக்கையிடுங்கள். இதோ, நான் என்னை அனுப்பியவரிடமே திரும்புகிறேன். உங்களுக்கு நிகழ்ந்த இவற்றையெல்லாம் எழுதிவையுங்கள்" என்றார். பின்னர் விண்ணகம் நோக்கிச் சென்றார்.

**பதில்பாடல்:** என்றும் வாழும் கடவுள் போற்றி

**நற்செய்தி : மாற்கு 12 : 38 - 44**

அக்காலத்தில், இயேசு கற்பித்துக்கொண்டிருந்தபோது, "மறைநூல் அறிஞர்களைக் குறித்துக் கவனமாய் இருங்கள். அவர்கள் தொங்கல் ஆடை அணிந்து நடமாடுவதையும் சந்தை வெளிகளில் மக்கள் தங்களுக்கு வணக்கம் செலுத்துவதையும் விரும்புகிறார்கள். தொழுகைக் கூடங்களில் முதன்மையான இருக்கைகளையும் விருந்துகளில் முதன்மையான இடங்களையும் பெற விரும்புகிறார்கள். கைம்பெண்களின் வீடுகளைப் பிடுங்கிக் கொள்கிறார்கள் கடுந்தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாகவிருப்பவர்கள் இவர்களே" என்று கூறினார். இயேசு காணிக்கைப் பெட்டிக்கு எதிராக அமர்ந்துகொண்டு மக்கள் அதில் செப்புக்காசு போடுவதை உற்று நோக்கிக் கொண்டிருந்தார். செல்வர் பலர் அதில் மிகுதியாகப் போட்டனர். அங்கு வந்த ஓர் ஏழைக் கைம்பெண் ஒரு கொதிராந்துக்கு இணையான இரண்டு காசுகளைப் போட்டார். அப்பொழுது, அவர் தம் சீடரை வரவழைத்து, "இந்த ஏழைக் கைம்பெண், காணிக்கைப் பெட்டியில் காசு போட்ட மற்ற எல்லாரையும் விட மிகுதியாகப் போட்டிருக்கிறார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். ஏனெனில் அவர்கள் அனைவரும் தங்களுக்கு இருந்த மிகுதியான செல்வத்திலிருந்து போட்டனர். இவரோ தமக்குப் பற்றாக்குறை இருந்தும் தம்மிடம் இருந்த அனைத்தையுமே, ஏன் தம் பிழைப்புக்காக வைத்திருந்த எல்லாவற்றையுமே போட்டுவிட்டார்" என்று அவர்களிடம் கூறினார்.

**தியானம்:** கடவுள் நம்மிடம் எதிர்பாப்பது பொன்னும் பொருளும் அல்ல, மாறாக உண்மையான தியாக உள்ளத்தையே! இதுவே இன்றைய இறைவார்த்தைப் பகுதியின் கருப்பொருளாக நமக்குத் தரப்பட்டுள்ளது. நற்செய்தியில் பெண்களுக்கே உரிய தியாகம், தாராள மனம், ஏழ்மை போன்ற பண்புகளைச் சுட்டிக்காட்டும் நிகழ்ச்சி இடம் பெறுகின்றது. செல்வர் பலர் போட்ட காணிக்கைகளை விட ஏழைக் கைம்பெண் போட்ட ஒரு செப்புக்காசு பெரியது என்று இயேசு பாராட்டுகின்றார். வெளித் தோற்றச் செயல்பாடுகள், சட்டதிட்டங்களைவிட உள்தோற்ற இரக்கம், நீதி, நம்பிக்கை கடவுளுக்கு உகந்தனவாக இருக்கின்றன. ஆகவே எமது சொந்த வாழ்வில் கடவுளோடு நமக்குள்ள உறவு எவ்வகையான உறவாக இருக்கின்றது என்று சிந்திக்க இன்றைய வாசகம் எமக்கு அறைகூவல் விடுக்கின்றன. ஞாயிறு தோறும் தவறாமல் திருப்பலிக்குச் செல்லுதல். ஒருசில பக்தி முயற்சிகளை பின்பற்றுதல், புனிதர்களின் திருவிழாக்களை வெகு விமரிசையாக கொண்டாடுவது இவ்வாறான வெளி அடையாளச் செயல்கள் மட்டும் எம்மை கடவுளுக்குகந்த மக்களாக மாற்றாது. மாறாக உள்ளத்தில் நீதியும் அன்பும் பகிர்வுமே இறைவனுக்கு ஏற்புடையவை என்பதையும் நாம் புரிந்து கொள்வோம்.